ராகவ்குமார்









# காந்தியைப் பரப்புவது கடமை!

எல்லா காலகட்டத்திலும் பேசுவதற்கு சுவாரஸ்யமாகவும், பேசப்படுவதற்கு நிறைய அரிய விஷயங்களைக் கொண்டவராகவும் இருக்கும் ஒரே தலைவர் நமது காந்திஜி மட்டும்தான். இத்தனை சிறப்புகள் வாய்ந்த காந்திஜியைப் பற்றி அரிய தகவல்களைச் சேகரித்தும், உலக நாடுகளில் காந்தியைப் பற்றிய உயர் மதிப்பீடுகளைத் தொகுத்து பள்ளிகளிலும், அரங்கங்களிலும் கண்காட்சியாக நடத்தி வருகிறார் எம்.எல்.ராஜேஷ். காந்தியின் மீது ஈடுபாடு கொண்ட ராஜேஷ் வயதான முதியவரோ, சுதந்திரப் போராட்ட தியாகியோ கிடையாது. ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தில் வேலை பார்க்கும் 33 வயது இளைஞர். காந்திஜியின் மீது தமக்கு ஈடுபாடு ஏற்பட்டது எப்படி எனச் சொல்கிறார்.

"சிறு வயதில் தபால் தலைகளைச் சேகரித்து வந்த கால கட்டத்தில் மகாத்மா காந்தி உருவம் பதித்த தபால்தலை என் கைக்குக் கிடைத்தது. தங்களது சொந்த நாட்டில் வாழ்ந்து மறைந்த தலைவர்களுக்கே அந்நாட்டில் தபால்தலை வெளியிடுவது அபூர்வமான விஷயம். ஆனால் நமது இந்தியாவில் வாழ்ந்து மறைந்த மகாத்மாவுக்கு, எங்கோ அயல் நாட்டில் தபால்தலைகள் வெளியிட்டிருப்பது எனக்கு ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது. தொடர்ந்து எந்தெந்த நாடுகளில் காந்திஜியின் தபால்தலை, நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன என்பதை நண்பர்கள் மூலமாகவும் இன்டர்நெட் வழியாகவும் தெரிந்து கொண்டேன். சுமார் 120 நாடுகள் வெளியிட்டுள்ள காந்தி தபால்தலைகளையும் 15 நாடுகளிலிருந்து நாணயங்களையும் பெருமுயற்சி எடுத்து சேகரித்தேன்.



ராஜேஷ் ...

காந்தியக் கொள்கைக்கு மாற்றுக் கருத்துடைய கம்யூனிச நாடான க்யூபா, சீனா; காந்தியை எதிரியாக பாவித்த இங்கிலாந்து ஆகியவற்றிலும் கூட தபால்தலைகளும், சிலைகளும் இருப்பது தான் மகாத்மாவின் தனிச்சிறப்பு.

எது சொன்னாலும் மேலைநாட்டினர் சொல்வதுதான் சரி, மேலைநாட்டினர் செய்வதுதான் சிறந்தது, என்று எண்ணும் இந்திய இளைஞர்களுக்கு, அவர்கள் வழியிலேயே சென்று தபால்தலைகளிலும், சிலைகளிலும், நாணயங்களிலும் மேலை நாட்டினர் உள்ளங்களில் காந்தி நீங்கா இடம் பெற்றிருப்பதைப் புரிய வைக்க எண்ணினேன். எனவே நான் சேகரித்த பொருட்களை கண்காட்சியாக பள்ளிகளிலும் நடத்துகிறேன்.

என்னுடைய ஆர்வத்தைப் பார்த்து, காந்தியிடம் 1945 - 48 வரை உதவியாளராய் இருந்த கல்யாணம், காந்திஜிக்கு வந்த கடிதங்களின் உறைகள், கையெழுத்துப் பிரதிகள், மற்றும் காந்திஜி சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு நாளைக்கு முன்பு, முஸ்லீம் ஒருவர், 'எனது பையனை போலீஸ் அரெஸ்ட் பண்ணிட்டாங்க. நீ என்ன செய்வியோ தெரியாது, எப்படியாவது என் மகனை வெளியில் கொண்டுகிட்டு வா' என உரிமையுடனும், கோபத்துடனும் அனுப்பிய தந்தியையும் எனக்குத் தந்தார்.

என்னுடைய சம்பளப் பணத்தில் எழுபத்தைந்து சதவிகிதத்தை காந்திஜி பற்றிய சேகரிப்புக்கும், கண்காட்சிக்கும் செலவழிக்கிறேன். காந்தி நடத்திய நவஜீவன், யங் இந்தியா போன்ற பத்திரிகைகளின் ஒருசில பிரதிகள் அமெரிக்காவில் இருப்பதைத் தெரிந்து கொண்டு, ஏலத்தின் மூலமாக இப்பிரதிகளை வரவழைத்தேன்.

என்னைப் பற்றிக் கேள்விப்பட்ட நடிகர் சிவகுமார் அவருடன் பேச அவரது இல்லத்துக்கு அழைத்திருந்தார். பேசிவிட்டுத் திரும்பும்போது, அவர் வரைந்த காந்தியின் பென்சில் ஓவியத்தை எனக்குத் தந்து, 'இது நான் மிகவும் நேசித்து வரைந்த ஓவியம். இதுதான் உங்களுக்கு சிறந்த பரிசு' என்றார்.

தபால் தலையின் விலையை விட போக்குவரத்துச் செலவு அதிகமாக இருந்தது. ஆனால் விலை மதிப்பில்லாத காந்தியின் முன்பு இச்செலவுகள் ஒரு பொருட்டே அல்ல.

காந்தி பற்றிய உயர்வான பிம்பத்தை நமது இளைஞர்களிடையே பரப்புவதே என் வாழ்வின் கடமை.

நமது தமிழ்நாட்டில் யார் யாரையோ மாவீரன் என்று சொல்வதும் நமது கலாசாரத்துக்குத் தொடர்பில்லாத யாரோ ஒருவரை டீ-சர்ட்டில் அணிந்து கொள்ளும் பழக்கமும் இளைஞர்களிடையே வளர்ந்து வருகின்றன. வன்முறை, தீவிரவாதம் மீது ஒருவித மயக்கத்தில் இந்த இளைஞர்கள் உள்ளனர். இவர்களுக்கு காந்தியின் சத்யாகிரகத்தையும், அஹிம்சையையும் புரிய வைப்பதும் கூட என் கண்காட்சியின் நோக்கம்தான்" என்று சொல்லும் ராஜேஷ், "பாகிஸ்தானில் மகாத்மாவுக்கு ஒரு சிலை கூட இல்லாமல் இருப்பது வருத்தமளிக்கிறது" என்கிறார். ●